# குழித்துறை நகராட்சி

## குழித்துறை நகர்மன்றத்தின் 20-03-2020 வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானம்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 9 வரையுள்ள பகுதிகளுக்கு சப்பாத்து பகுதியில் அமைந்துள்ள நீரேற்று நிலையத்திலிருந்து குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்யப்பட்டு குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையம் நகரின் மையப்பகுதியில் தாமிரபரணி ஆற்றின் கரையில் அமைந்துள்ளது. மார்த்தாண்டம் பகுதியிலிருந்து வரும் கழிவுநீர் மற்றும் அரசு மருத்துவமனையிலிருந்து வரும் கழிவுநீர் இந்நிலையத்தின் அருகில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் மூலம் ஆற்றில் நேரடியாக கலப்பதாகவும், இந்நீரைத்தான் குடிநீருக்கு உபயோகப்படுத்துவதாகவும் செய்தித்தாள் மற்றும் தொலைக்காட்சிகளில் தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. மேலும் மாசுகட்டுப்பாட்டு வாரிய பொறியாளர்களும் வந்து ஆய்வு மேற்கொண்டுள்ளார்கள். எனவே இந்நீரை தூய்மைப்படுத்தும் நோக்கில் தாமிரபரணி ஆற்றின் இருகரைகளிலும் Reed Water Treatment System அமைக்கவும், சப்பாத்து நீரேற்று நிலையத்தை சுற்றிலும் இரும்பு கம்பிவேலி அமைக்கவும் ஆற்றின் கரையோரத்தில் பழைய வண்ணக்கற்களைக் கொண்டு தளம் அமைக்கவும் மதிப்பீடு ரூ.13.50 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. பணியின் அவசரம் மற்றும் பொதுமக்களின் சுகாதாரம் கருதி ரூ.13,50,000/-ற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3474**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 2

பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2019-2020-ன்கீழ் குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் காந்தி மைதானத்தில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு Bio-Toilet அமைக்கும் பணி ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஆ2/2817/2019, நாள் 06-03-2020-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செயல்படுத்திட மன்றத்தின் ஒப்புதலுக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3475**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சியின் பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு கொரோனா நோயின் தடுப்பு நடவடிக்கைக்காக கிருமி நாசினி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.20.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**நகர்மன்ற தீர்மான எண் : 3476**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவிற்கு தற்போது கொரோனா நோய் தடுப்பு நடவடிக்கை எடுக்கும் பொருட்டு பணியாளரின் நலனை கருத்தில் கொண்டு கிருமி நாசினி தெளித்திட தேவையான கீழ்கண்ட பொருட்கள் வாங்கிட சுகாதார ஆய்வாளர் மற்றும் சுகாதார அலுவலர் 13-03-2020-ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளது போல் Tamil Nadu Multipurpose Indco Serve Thiruchy என்ற நிறுவனத்திடம் கீழ்கண்ட பொருட்கள் வாங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1) முக கவசம் - 120 எண்ணம்

2) தெளிப்பான் (பெரியது) - 2 எண்ணம்

3) தெளிப்பான் (சிறியது) - 5 எண்ணம்

4) லைசால் - 100 லிட்டர்

5) வாளி - 10 எண்ணம்

6) மாப்பு - 10 எண்ணம்

7) பிளீச்சிங் பவுடர் - 2000 கிலோ

8) நீத்திய சுண்ணாம்பு - 3000 கிலோ

9) சோடியம் ஹைகுளோரைடு- 500 கிலோ

அ.கு.:- பொதுமக்களின் நலனை கருத்தில் கொண்டும் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டும் உடனே பொருட்கள் வாங்கி வழங்கிடவும் அதற்கான தொகையினை பொது நிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3477**
**அனுமதிக்கப்படுகிறது**

## குழித்துறை நகர்மன்றத்தின் 30-03-2020 திங்கள் கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட மன்றப்பொருள் மற்றும் தீர்மானங்கள்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சி வரி மற்றும் வரி இல்லா இனங்களின் வசூல் தீவிரப்படுத்தும் பொருட்டு வாகனம் மூலம் விளம்பரம் செய்த வகையில் ரூ.895/- மற்றும் விளம்பர பேனர்கள் அச்சடித்த வகைக்கு ரூ.1050/-க்கான செலவினப்பட்டியலும் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி தொகை ரூ.1945/- வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.2552/2017/அ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3478**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள சேமநல நிதி தொகைக்கு 2010-2011 முதல் 2018-2019 வரை உள்ள காலத்திற்கு வட்டி கோரி உள்ளாட்சி தணிக்கை துறைக்கு நாளது வரையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படவில்லை. இந்நகராட்சியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் வட்டி கோரி விண்ணப்பம் செய்துள்ளனர். இந்நிலையில் மேற்படி பணியினை செய்து வட்டி தொகை பெற்று தர தனியார் நிறுவனத்தார் மூன்று விலைப்புள்ளி அளித்துள்ளனர். அதன் விபரம் கீழ்கண்டவாறு.

| வ. எண் | பணியின் விபரம் | விலைப்புள்ளி கொடுத்தவர் விபரம் | | |
|---|---|---|---|---|
| | | Rajrev Soft System | NTeach solution | Venkat Events |
| 1 | தனியார் விபரம் தயார் செய்ய (Each Persion one year) | 60 | 70 | 80 |
| 2 | சேமநல நிதி பணியாளர்களின் வட்டி பிரேரணை தயார் செய்ய (வருடம் 1-க்கு) | 6000 | 7000 | 8000 |
| 3 | அச்சு கூலி தயார் செய்ய (பக்கம் ஒன்றுக்கு) | 4.00 | 4.50 | 5.60 |

எனவே மேற்படி குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. Rajrev Soft System நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதிக்கு.
அ.கு.- மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3479**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் காய்கறி சந்தை IDSMT கடை எண்.28-ஐ குத்தகைக்கு எடுத்துள்ள திரு.M. பெல்கிஸ் பெனிகர் என்பவர் ஏற்கனவே செலுத்தியுள்ள வைப்பு தொகையினை திரும்ப வழங்க கேட்டுள்ளார். மேற்படி வைப்பு தொகை காலங்கடந்த வைப்பு தொகை

பதிவேட்டில் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

| வ. எண் | வைப்புத் தொகை திரும்ப கோரியவர் பெயர் | வைத்தொகை செலுத்திய வருடம் | கடை எண் | காலம் கடந்த வைப்புத் தொகை பதிவேட்டில் இருப்பில் உள்ள தொகை ரூபாய் | காலங்கடந்த பதிவேடு பக்க எண் |
|---|---|---|---|---|---|
| 1 | M. பெல்கிஸ் பெனிகர் | 2006-2007 | 28 IDSMT | 58720 | Vol.III Page No.19 |

ந.க.எண்.188/2020/பி1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3480**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 4

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12-ல் அமைந்துள்ள பனங்கூடல் விளை பகுதியில் மேட்டுப்பகுதியில் அமைந்துள்ள சுமார் 50 வீடுகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யும்போது அழுத்தக் குறைவு காரணமாக தண்ணீர் சரியாக வரவில்லை என புகார் வந்துள்ளது. அதன்படி இடத்தை நேரில் ஆய்வு செய்யும்போது அந்தப்பகுதிக்கு மட்டும் Supply Main-லிருந்து Bye Pass line ஆக குழாய் அமைத்தால் தண்ணீர் சீராக கிடைக்கும் என தெரிகிறது. எனவே இதற்கென 260M நீளத்திற்கு PVC பைப் லைன் அமைத்து Sluice வால்வு பொருத்தி பணியினை மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1,60,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

குடிநீர் அவசியம் கருதி இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3481**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட மார்த்தாண்டம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நுண்ணுயிர் உரம் தயாரிக்கும் கூடத்தில் கூடுதலாக மின்விளக்கு பொருத்தவும் காற்றோட்ட வசதிக்காக Mechanical exhaust fan பொருத்தவும் முன்பகுதியில் குப்பைகளை பிரித்தெடுக்கும் பகுதியில் கூரை போடுதல் மற்றும் பழுதடைந்துள்ள சுற்று சுவர், சிறுபாலம் அமைத்தல் ஆகிய பணிகள் ரூ.9.90 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27-02-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.டி. ஜஸ்டின்குமார், குழித்துறை | மதிப்பீட்டை விட 0.16% குறைவு |
| 2 | திரு.டி. பிறேம்குமார் | மதிப்பீட்டை விட 0.56% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 மதிப்பீட்டை விட 0.16% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.டி. ஜஸ்டின்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3482**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட கீழ்பம்மம் உரக்கிடங்கில் Bio-Mining பணிக்கு நிறுவப்பட்டுள்ள இயந்திரங்களை இயக்குவதற்கு தேவையான Panel Board மற்றும் மின் இணைப்பிற்கான கேபிள்கள் மற்றும் Lighting arrangement செய்யும் பணிகள் ரூ.4.30 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27-02-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/S. Sree Sai recycle solutions, Madurai | மதிப்பீட்டை விட 0.23% குறைவு |

| | | |
|---|---|---|
| 2 | M/s. Sri Sabaries Traders, Madurai | மதிப்பீட்டை விட 0.99% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 Sree Sai Recycle Solutions Madurai நிறுவனத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3483**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கும் சீரான முறையில் குடிநீர் வழங்கும் பொருட்டு பிரதான குழாய்கள் மற்றும் வினியோக குழாய்கள், சுலீஸ் வால்வுகள், ஏர்வால்வுகளில் மற்றும் பொதுக்குழாய்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் பழுது நீக்கம் செய்யும் பணிகள் ரூ.7.00 லட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள 27-02-2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.P. ஜெயச்சந்திரன் | மதிப்பீட்டை விட 0.07% குறைவு |
| 2 | திரு.A. ஆன்றணி, கண்ணக்கோடு | மதிப்பீட்டை விட 5.20% அதிகம் |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண்.1 திரு.P. ஜெயச்சந்திரன் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ள குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3484**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 8

குழித்துறை நகராட்சி சொத்துவரி தொடர்பாக சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் நகராட்சிக்கு எதிராக திரு. ஐபன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண்.5089/2020-க்கு நகராட்சி சார்பில் நீதிமன்றம் ஆஜராகிய வகையில் வழக்கறிஞர் கட்டணத்தொகை ரூ.10,000/-ஐ வழக்கறிஞர் திரு. ஆதிமூலபாண்டியன் என்பவருக்கு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
ந.க.எண்.633/2020/அ1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3485**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 9

தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகள் தொடர்பாக குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு Kal Publication (P) Ltd-க்கு ரூ.9975/- மற்றும் The Daily Thanthi-க்கு ரூ.9841/- விளம்பரக் கட்டணம் வழங்க பட்டியல் வரப்பெற்றுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணங்கள் சம்பந்தப்பட்ட பத்திரிக்கைகளுக்கு வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3486**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 10

2020.2021-ம் நிதியாண்டிற்கான வருவாய் மற்றும் மூலதனநிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதிக்குரிய வரவு செலவு (பட்ஜெட்) மன்றத்தின் பார்வைக்கு.
ந.க.எண்.550/2019/பி1.

**நகர்மன்ற தீர்மான எண் : 3487**
**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 11

இந்நகராட்சியில் 2018-2019-ம் ஆண்டிற்கான தணிக்கை புத்தகங்கள் அச்சிடப்பட்டு வைண்டிங் செய்த வகையில் தொகை ரூ.19885/- Aruma Tec Job உரிமையாளர் திரு.C. நாகப்பன் பெயருக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர்மன்ற தீர்மான எண் : 3488**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 12

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்திலுள்ள 45KVA கிர்லோஸ்கர் ஜெனரேட்டர் பழுதடைந்துள்ளதால் மேற்படி ஜெனரேட்டரின் பழுதினை நீக்கம் செய்ய மதிப்பீடு ரூ.70,000/-ற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்வதற்கும் அதற்கான செலவினத்தை குடிநீர் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3489**

**அனுமதிக்கப்படுகிறது**

பொருள் எண். 13

தமிழக அரசின் மூன்றாண்டு சாதனைகள், குழித்துறை நகராட்சியின் வளர்ச்சித் திட்டப்பணிகள் தினமுரசு நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரக்கட்டணம் ரூ.9975/- Kal Publications(P) Ltd-க்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பட்டியல் தொகை வருவாய் நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3490**

**அனுமதிக்கப்படுகிறது**

<u>பொருள் எண். 14</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 21 மிஷன் மருத்துவமனை அருகாமையில் காமராஜ் தெருவிற்கு செல்லும் சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் பொது மக்கள் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. எனவே மேற்படி சாலையை செப்பனிட மதிப்பீடு ரூ.2.20 லட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை செய்யவும் அதற்கான செலவினத்தை வருவாய் நிதியில் செலவிடவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**நகர்மன்ற தீர்மான எண் : 3491**
**அனுமதிக்கப்படுகிறது**

ஒப்பம்/- திரு. எஸ். மூர்த்தி
ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.